தினத் தந்தி
ஞாயிறு மலர்

நாட்டுக்காக உருவாகும் நல்ல மாணவி

அஸ்வினி சீனிராஜ் நினைவுகளில் பல்வேறு காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து போகின்றன. அவை அனைத்தும் இந்தியா- பாகிஸ்தான் எல்லைகளோடும், தேச பக்தியோடும் தொடர்புடையவை. அந்த காட்சிகளை அவரே விளக்குகிறார்..

"நான் பள்ளிப்பருவத்தில் வாகா எல்லைக்கு சென்றேன். அங்கு இந்திய எல்லைப்பகுதி கேலரியில் இந்தியர்களும், மறுமுமுள்ள பாகிஸ்தான் எல்லைப்பகுதி கேலரியில் பாகிஸ்தானியர்களும் அமர்வார்கள். அங்கு ஒரே நேரத்தில் இந்திய எல்லைப்பகுதியில் நமது தேசியக் கொடியையும், பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் அவர்கள் நாட்டு கொடியையும் ஏற்றுவார்கள். பின்பு மாலையில் ஒரே நேரத்தில் இருநாட்டு கொடிகளையும் இறக்குவார்கள். அந்த காட்சிகளை கண்டுகளிக்க அந்தந்த நாட்டு மக்கள் திரண்டு அவரவர் கேலரியில் உட்கார்ந்திருப்பார்கள். கொடிகளை ஏற்றும்போதும், இறக்கும்போதும் உணர்ச்சியை தூண்டும் விதத்தில் அவரவர் நாட்டுக்கு ஆதரவாக கோஷம் எழுப்புவார்கள். நானும் உணர்ச்சிபொங்க தாய்நாட்டிற்காக கோஷம் எழுப்பினேன். அதற்காகவே அடிக்கடி எல்லைப்பகுதிக்கு செல்ல வாய்ப்பு கிடைக்காதா என்று ஏங்கியிருக்கிறேன்.

சில வருடங்கள் கழித்து இன்னொருமுறை வாகாவில் இருந்து சற்று தூரத்தில் இருக்கும் எல்லைப்பகுதி ராணுவ பாதுகாப்பு கோபுரத்தில் நானும், என் அக்காள் அனிஷாவும், சில ராணுவ அதிகாரிகளின் பிள்ளைகளும் ஏறினோம். எங்கள் பாதுகாப்புக்கு ஒரு ராணுவ வீரர் வந்திருந்தார். விபரீதம் புரியாமல் வேகமாக நாங்கள் துள்ளிக்குதித்து மேலே சென்றோம். எதிர்கோபுரத்தில் இருந்து பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் எங்களை பார்த்திருக்கிறார்கள். 'இந்திய ராணுவ வீரர்கள் திடீரென்று கோபுரத்தில் ஏறி, தங்கள் நிலைகளை நோக்கி தாக்கப்போகிறார்கள்!' என்று பாகிஸ்தான் ராணுவத்தினர் தப்பாக புரிந்துகொண்டனர். கீழே இருந்து அதை பைனாகுலர் மூலம் கண்காணித்துக்கொண்டிருந்த ராணுவ அதிகாரிகள் சமாதான சமிக்ஞை செய்து புரியவைத்த பின்னரே பாகிஸ்தான் வீரர்கள் அமைதியானார்கள். அந்த திரில்லை நான் பள்ளிப்பருவத்திலே அனுபவித்து விட்டேன்.." என்பது போன்ற நினைவுகளை அஸ்வினி பகிர்ந்துகொள்ளும்போது மறந்துவிடாமல் குறிப்பிட வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அவரது தந்தை சீனிராஜ், ராணுவத்தில் மேஜராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

அஸ்வினி சீனிராஜ்

வாகா அணுபவம் அஸ்வினியிடம் தேசப்பற்றை வளர்த்திருக்கிறது. எல்லை கோபுர அணுபவம், 'இவ்வளவு திரில்லுக்கு மத்தியில் சேவையாற்றும் ராணுவத்தில் நாமும் இணைய வேண்டும்' என்ற ஆர்வத்தை தூண்டிவிட்டிருக்கிறது.

"அப்பாவின் ராணுவ சேவைகாரணமாக நானும், அம்மா ரேணுகா தேவியும், அக்காளும் பல்வேறு மாநிலங்களில் வசித்திருக்கிறோம். அப்பா நாங்கள் வசிக்கும் பகுதியில் இருந்து 200, 300 கி.மீ. தூரத்தில் இருக்கும் கார்கில், சியாச்சின் போன்ற பகுதிகளில் பணியில் இருப்பார். வருடத்திற்கு நாலைந்து முறை எங்களை பார்க்க வரும்போது எல்லையில் நடக்கும் திகில் நிறைந்த பாதுகாப்பு பணிகளை விவரிப்பார். அதை கேட்கும்போது எனக்கு பயம் வராது. நானும் அதில் ஒருவராக இருக்கவேண்டும், என்ற உத்வேகம்தான் வரும்.." என்று கூறும் அஸ்வினி, இப்போது விமானப்படை அதிகாரியாகவேண்டும் என்ற எழுச்சியோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அதற்காக அவர் தேர்ந்தெடுத்த களம் தேசிய மாணவர் படை.

என்.சி.சி.யில் சேர்ந்து, கடுமையான பயிற்சிகளை பெற்று, சாதனை படைத்து பிரதமர் மன்மோகன்சிங்கிடம் இருந்து பரிசு கோப்பையை பெற்றிருக்கிறார். இவர் ஸ்ரீசாய்ராம் என்ஜினீயரிங் கல்லூரி மாணவி. பி.ஈ. மூன்றாம் ஆண்டு படிக்கிறார்.

"பள்ளி காலத்திலே ராணுவ அதிகாரியாக வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், கல்லூரியில் சேர்ந்ததும் என்ஜினீயரிங் படிப்பு அந்த ஆசையை மழுங்கடித்துவிடும் என்றுதான் நினைத்தேன். ஆனால் கல்லூரியில் மாணவர் அறிமுக விழாவில் பேசிய கல்லூரி நிறுவனர் லியோ முத்து, 'வீட்டிற்கு மட்டும் பலன் அளிக்கும் விதத்தில் உங்கள் படிப்பு அமைத்துவிடக்கூடாது. நாட்டுக்கும் பலன் அளிக்கும் விதத்தில் அமைய வேண்டும். எல்லோரும் ஒரே துறையை நோக்கி செல்லவேண்டாம். மற்றவர்கள் முடியாது என்று தயங்கும் துறைகளில் நீங்கள் இறங்கி, அதையும் முடித்துக்காட்டி சாதிக்க வேண்டும்' என்றார். அப்போதே நான் கண்ட ராணுவ அதிகாரி கனவு நிறைவேறிவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. என்.சி.சி. விமானப் படை பிரிவில் சேர்ந்தேன். கல்லூரியில் சிறப்பாக வகிகாட்டி ஊக்கு வித்தார்கள். பிரதமரிடம் பரிசு கோப்பையை பெறும் அளவுக்கு உயர்த்திருக்கிறேன்.." என்றார்.

கம்பீரமான தோற்றம். 5.9 அடி உயரம். தன்னம்பிக்கை நிறைந்த பார்வை. கறுகறுப்பான செயல்பாட்டுடன் காட்சியளிக்கும் அஸ்வினியின் என்.சி.சி. சீருடையில் 'சீனியர் அண்டர் ஆபீசர்' பதவிக்குரிய இரண்டு பட்டைகள் பளிச்சிடுகின்றன. டெல்லி குடியரசு தினவிழா அணிவகுப்பில் பங்கேற்பதற்கான 'ஆர்.டி.சி' டேட்டு மற்றும் 'ராஜபாத் டேட்டு'களை தெஞ்சில் தாங்கி தலை நிமிர்ந்து நிற்கிறார்.

"ராஜபாத் டேட்டு குறிப்பிடத்தக்கது. புதுடெல்லி ஜனாதிபதி மாளிகையில் இருந்து- இந்தியா கேட் வரை கிட்டத்தட்ட ஐந்து கி.மீ. தூரமுள்ள பகுதியை ராஜபாதை என்று அழைக்கிறார்கள். குடியரசு தினவிழாவில் அதில்தான் அணிவகுப்பு ஊர்வலம் நடக்கும். டெல்லி சென்ற தமிழ் நாடு, புதுச்சேரி, அந்தமான் நிக்கோபர் ஆகிய பகுதிகளில் உள்ள பெண்கள் என்.சி.சி. அணிக்கு நான் டேடு கமாண்டராக இருந்தேன். அதற்காக எனக்கு 'ராஜபாத் டேட்டு' கிடைத்தது.." என்கிறார்.

பிரதமரிடம் இருந்து பரிசு கோப்பையை பெற்றது பற்றி கேட்டபோது..

"கடந்த குடியரசு தினவிழா அணிவகுப்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக நாங்கள் ஒரு மாதத்திற்கு முன்பே டெல்லி சென்றுவிட்டோம். அங்கு தினமும் அதிகாலை 2 மணியில் இருந்து எங்களுக்கு ராணுவத்தினருக்கான உடற்பயிற்சிகளை அளித்தார்கள். நாங்கள் ஏற்கனவே ஆண்களோடு சேர்ந்து கடுமையான உடற்பயிற்சியினை பெற்றிருந்த தால், அது எங்களுக்கு கடினமாகத் தெரியவில்லை. நாடு முழுவதிலும் இருந்து வந்திருந்த என்.சி.சி. மாணவர்களிடம் 25 விதமான போட்டிகளை நடத்தி, திறமையான வர்களை தேர்ந்தெடுத்தார்கள். அதில் பல போட்டிகளில் என் திறமையை நிரூபித்தேன். தமிழகத்தை உள்ளடக்கிய எங்கள் பிரிவிற்கு மூன்றாம் இடம் கிடைத்தது. அதற்கான பரிசு கோப்பையைத்தான் பிரதமர் மன்மோகன்சிங் என்னிடம் வழங்கினார். முதல் இடத்தை மகாராஷ்டிராவும், இரண்டாம் இடத்தை கர்நாடகமும் பெற்றது.." என்று விளக்குகிறார், அஸ்வினி.

என்.சி.சி.யில் சாதனையாளராக மாறிவிட்டதால் தனிப்பட்ட முறையில் உங்கள் குணாதிசயங்களில் ஏற்பட்டிருக்கும் நல்ல மாற்றங்கள் என்ன? என்று கேட்டபோது..

"எவை எல்லாம் கடினம் என்று நினைத்தேனோ அவற்றை எல்லாம் எளிதாக வசப்படுத்திவிடலாம் என்பதை என்.சி.சி. பயிற்சிகள் எனக்கு உணர்த்தியிருக்கின்றன. அதிகாரிகள் ஆண்,பெண் என்ற பேதமே இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் ஆண்களைப்போல் எங்களுக்கும் கடுமையான உடற் பயிற்சிகளை தந்தார்கள். அதனால் இப்போது என்னிடம் தேவையற்ற தயக்கங்கள் கிடையாது. பயிற்சிகளில் செய்யும் சின்ன தப்புகளுக்குகூட 4.4 கிலோ எடைகொண்ட எஸ். எல்.ஆர். வகை துப்பாக்கியை தூக்கிக்கொண்டு மரவுண்ட் ஓடவைப்பார்கள். அதனால் இப்போது எந்த சூழ்நிலையையும் சமாளிக்கும் அளவுக்கு உடல் ஆற்றலும், மனதைரியமும் வளர்த்திருக்கிறது. குழுவோடு சேர்ந்து செயல்படும் ஆற்றல், தலைப்பண்பு போன்ற பல சிறப்பு குணாதிசயங்கள் என்னிடம் உருவாகியுள்ளன. எனது வளர்ச்சிக்கு கல்லூரி தலைமை செயல் அதிகாரி சாய்பிரகாஷ், முதல்வர் ஜெயக்குமார் மற்றும் பாலசுப்பிரமணியம், குமரப்பன், என்.சி.சி. அதிகாரி முருகன் போன்றவர்களும் காரணம். என் பெற்றோரின் வழிகாட்டுதல் எனக்கு பெரும் ஊக்கமாய் இருக்கிறது' என்று கூறும் அஸ்வினி டிடிபிலும் சிறந்து விளங்குகிறார். மதிப்பெண்களை அள்ளி எடுக்கிறார். பூந்தமல்லியில் பெற்றோருடன் வசிக்கிறார். என்.சி.சி.யில் ஏராளமான சான்றிதழ்கள் பெற்றுள்ளார்.

தலைமைப் பண்பில் சிறந்தவராக இருக்கும் அவரிடம், இளம்பெண்கள் தற்கொலை செய்துகொள்வது அதிகரித்து வருகிறதே அதை தவிர்க்க என்ன செய்யவேண்டும்? என்று கேட்டபோது..

"தோல்விகளை தாங்கிக்கொள்ளும் பக்குவம் இளம்பெண்களிடம் இல்லை. சின்ன தோல்விகளைகூட தாங்கிக்கொள்ள முடியாமல் மனதொடிந்துபோகிறார்கள். பள்ளிப்பருவத்திலே அவர்கள் விளையாட்டு போட்டிகளில் கலந்துகொள்ளவேண்டும். வெற்றியை மட்டுமல்ல, தோல்விகளையும் சந்தித்து அதனை ஜீரணிக்கவும், அதில் இருந்து மீளவும் தெரிந்துகொள்ள வேண்டும். தோல்விகள்தான் மனதை பக்குவப்படுத்தும் என்ற உணமையை உணராதவர்களிடம்தான் தற்கொலை எண்ணம் இருந்துகொண்டிருக்கிறது. தற்கொலை எண்ணம் கொண்ட சில பெண்களுக்கு நான் தன்னம்பிக்கையூட்டி, அவர்களை நான் இயல்பு நிலைக்கு கொண்டு வந்திருக்கிறேன். கல்லூரியில் எனக்கு கிடைக்கும் கல்வியும், என்.சி.சி. பயிற்சியும்தான் அதற்கு காரணம்.." என்று அஸ்வினி கூறுகிறார்.

நாட்டுக்காக உருவாகும் இந்த நல்ல மாணவிக்கு ஒரு சல்யூட் அடிப்போம்!